14/8/70
8/25.

# தந்தி

University of Jaffna, Sri Lanka
Periodicals Division
Library

இல- 1107 | 1970 ஆகஸ்ட் 13 வியாழக் கிழமை | விலை சதம் 5

## விவாகம் செய்யுங்கள் வீடு கிடைக்கும்!

# பிரம்மச்சாரிகளுக்கு அதிர்ஷ்டம் வருகிறது

### மீனாட்சி



என்னுங்க, சோஷலிஸ சமுதாயத்தில் அடிப் படை உரிமைகளிலும் வேற்றுமை இருக்குமா?

அப்படியில்லை என் கிறார் பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தை எதிர்த்த டாக்டர் கொல்வின் ஆர்- டீ- சில்வா, ஆனால் அதை எதிர்பார்க்கிறார் ஏகாதிபத்திய தாசராய் இருந்த திரு- ஜீ- ஜீ- பொன்னம்பலம்!

**விவாகம் செய்யு் விரும்பும் அர சாங்க உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு நல்ல செய்தி! இவ்வாண்டு முடிவுக்குள் 2500 வீடுகளைக் கட்டி அவர்களுக்குக் குறைந்த வாட கைக்கு விட அரசாங்கம் உத்தே சித்திருக்கிறது என்பதே அந்த நல்ல செய்தி ஆகும்.**

கொழும்பில் வீட்டுப் பிரச் சினை தலைதூக்கி உள்ளதால் பிரம்மச்சாரிகளாய் இருக்கும் பல அரசாங்க ஊழியர் விவா கம் செய்யத் தயங்குகிறார்கள். வீட்டுப் பிரச்சினை மட்டுமின்றி, வீட்டு வாடகையும் அதிகமாய் இருப்பதே இதற்குக் காரணம்.

இதனால்தான் அவர்கள் வெளி யூர்களில் வசித்துக் கொண்டு கொழும்புக்கு வேலைக்கு வரு கிறார்கள். கொழும்பில் மாதம் 75 ரூபா முதல் 150 ரூபா வரை தங்குமிடத்திற்குச் செலவு ஏற்படு கிறது.

மாதம் ரூபா 250-க்குக் குறை வாகச் சம்பளம் பெறும் பிரம் மச்சாரி அரசாங்க ஊழியர்கள் இதனால் கொழும்பில் தங்க முடி யாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அவர்களது விவாகமும் தடைப் படுவதாக அரசாங்கம் கருது கிறது.

இதன் காரணமாக விடுதிக ளின் வாடகையைக் குறைக்க அர சாங்கம் தீர்மானித்திருப்ப துடன் 2500 புதிய வீடுகளை இவ் வாண்டு முடிவுக்குள் கட்டவும் உத்தேசித்துள்ளது. (ய)

### புதிய முத்திரைகள்

கொழும்பு, ஆக. 13

நாளை முதல் இரு புதிய முத்திரைகள் விற்பனைக்கு வரவுள்ளன.

ஒரு ரூபா பத்துச் சத முத்தி ரையும், ஐம்பது சத முத்திரை யுமே விற்பனைக்கு வரவுள்ள முத்தி ரைகள் ஆகும்.

## கடைகளில் 12½ மணி நேரம் வியாபாரம் நடக்குமா?

கொழும்பு, ஆக. 13

காலை எட்டு மணி முதல் இரவு 8-30 வரை கடைகளைத் திறந்து வியாபாரம் செய்யும் திட்டம் பற்றி ஆராய்வதற் கென தொழில் அமைச்ச ரால் நியமிக்கப்பட்ட உப குமிட்டியின் அறிக்கையை மந் திரி சபை அங்கீகரித்து உள் ளது.

மேற்படி திட்டம் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக் கும்படி, தொழில் அமைச்சர் திரு. எம். பி. டி. இஸட். சிறிவர்தன ஒரு உபகுமிட்டியை நியமித்திருந்தார். அந்த உபகுமிட்டி சமர்ப்பித்த அறிக்கையைப் பரிசீலனை செய்த பின், மந்திரி சபை அதை அங்கீ கரித்தது.

இத்திட்டம் பரீட்சார்த்த மாகவே முதலில் அமுல் நடத்தப் படும். இத்திட்டத்தை சிறந்த முறையில் அமுல் நடத்துவதற்கு அரசாங்கத்துடன் ஒத்துழைப்ப தாக கடைச் சொந்தக்காரர்கள் உறுதி அளித்துள்ளனர்.

அதேவேளையில், பொதுமக் களும் இத்திட்டம் அமுல் நடத் தப்படுவதற்கு ஆதரவு தந்து உள் ளனர். இத்திட்டத்தின் மூலம் பெருமளவில் வேலை இல்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடி யும் என நம்பப்படுகிறது. இத் திட்டம் அமுல் நடத்தப்படும் பொழுது, பொதுமக்களின் வச தியை முன்னிட்டு சிறந்த போக்கு வரத்து வசதிகளைச் செய்து கொடுக்கவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

சமீபத்தில் இழுக்கப் பட்ட மகாஜன சம்பத சுவீப்பில் இந்த இரு கார் களும் பரிசுகளாக வழங் கப்பட்டன. ரோலண்ட்ஸ் ஸ்தாபனத்தார் அளித்த "கிறிஸ்லர்" கார் முதல் பரிசாகவும், பிரிட்டிஷ் கார் கம்பெனி அளித்த "மொரிஸ் ஒக்ஸ்போர்ட்" கார் இரண்டாவது பரி சாகவும் வழங்கப்பட்டன. (ய)




## செனட்சபை வேண்டும் என்கிறார் எதிர்க்கட்சி தலைவர்

புதிய அரசியலமைப்பில் செனட் சபை இருக்க வேண்டிய அவசியத்தை எதிர்க் கட்சித் தலை வர் திரு- ஜே- ஆர்- ஜெயவர் தன வற்புறுத்தி இருக்கிறார்-

இது சம்பந்தமாக அரசாங் கத்துக்கு சமர்ப்பித்திருக்கும் மக ஜரில் அவர் கூறி இருப்பதாவது:

"இரண்டாவது சபை ஒன்றை பராமரிக்கும் யோசனையை நாம் முற்றாகக் கை விடக் கூடாது என நான் கருதுகிறேன்.

"தற்போதைய செனட் அதிருப் திகரமாகவும், எதிர்க்கக் கூடிய முறையிலும் விளங்கிய போதிலும் பல சிறுபான்மையினருக்கும், இதுவரை பிரதிநிதித்துவம் பெறாத வர்த்தக, உத்தியோக, மதத் துறைகளுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கக் கூடிய முறையில் புதிய செனட் ஒன்றை அமைக்கலாம். அதன் அதிகாரங்கள் வரையறுக் கப்பட்டதாயும் இருக்கலாம்."

எதிர்க் கட்சித் தலைவர் தமது மகஜரில் வற்புறுத்தியிருக்கும் இதர அடிப்படைக் கொள்கைகள் வருமாறு:

1. உரிமைகள் மசோதா, 2- அரசாங்கக் கொள்கை பற்றிய அறிக்கை, 3- சுதந்திரமான நீதி பரிபாலனம், 4. ஜனாதிபதி ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பதவி வகித்தல், 5. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளித் தல், 6. அரசாங்க சேவைக் கமி ஷன்- (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பங்களுக்குள் ஏற்கனவே பகை அப்போது-

# கன்னி வயிறு பெருத்தது சச்சரவும் வளர்ந்தது

## பிள்ளைக்கு அப்பன் நானில்லை என்று இளைஞன் பிடிவாதம்

"யசவதி எனது சொந்தக்காரி- அவள் தந்தை தினசரி குடித்து விட்டு வந்து எங்களைத் திட்டுவது வழக்கம்- இதனல் எங்கள் குடும்பமும் அவள் குடும்பமும் ஒற்றுமையாக வாழ முடியவில்லை- இந்த நிலையில் கன்னி யசவதியின் வயிறு பெருத்தது!, இதன் பின்னர் இரு குடும்பங்களின் மத்தியில் பிளவு மேலும் அதிகரித்தது-"

யசவதிக்குப் பிறந்த பிள்ளைக்கு தான் தந்தை அல்ல என்று பியசேன மறுத்தார்.

களுத்துறை மேலதிக நீதவான் திரு. நிசங்கா வீரரத்ன முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட ஜீவனும்ச வழக்கு ஒன்றில் சாட்சியம் அளித்த எஸ். டி. பியசேன என்னும் இளைஞர் மேற்கண்டவாறு கூறினர்.

பியசேனவுடன் தான் கொண்ட தொடர்பினல் தனக்கு குழந்தை ஒன்று பிறந்ததாகவும், அதற்கு ஜீவனும்சம் பெற்றுத் தருமாறும் கோரி யசவதி வழக்குத் தொடர்ந்துள்ளார்.

"எனது வாக்கு உண்மையானது என்பதை நிரூபிக்க நான் கண்டி விகாரையில் சத்தியம் செய்துள்ளேன். விகாரையில் நான் சத்தியம் செய்த போது யசவதியும் ஒரு பொலீஸ் அதிகாரியும் கூட இருந்தனர்" என்றும் பியசேன தனது சாட்சியத்தில் கூறினர்.

விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (ம)

## கூந்தலுக்கு மை பூசுவதில் ஜெர்மன் பெண்கள் ஆர்வம்

ஜெர்மனி, ஆக. 12

ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் உள்ள பெண்களில் 10-ல் 4 பேர் கூந்தலுக்கு மை போடுகின்றனர். தமது கூந்தலின் இயற்கை நிறத்தில் திருப்தி அடையாத பெண்கள் கூந்தலுக்கு மை பூசுவதில் அதிக நாட்டம் கொண்டுள்ளனர்.

அநேகமாக செம்பட்டை கூந்தலும், வெளுப்பு நிற கூந்தலும் உடைய பெண்களே மைபூசி அழகு படுத்துவதில் ஈடுபாடு காட்டுகின்றனர்.

உத்தியோகம் பார்ப்பவர் மாத்திரமல்ல, வீட்டில் இருக்கும் பெண்களும் கூந்தலுக்கு மை இடுகின்றனர். கருப்பு நிற கூந்தலையே அநேகர் விரும்புகின்றனர்.

வயது ஏற ஏற பெண்கள் தமது கூந்தலில் அக்கறை காண்பிக்கின்றனர். 45-க்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டோரில் 40 சதவீத மானேர் கூந்தலுக்கு மை பூசுகின்றனர்.

பெரும்பாலான பெண்கள் தமது வீடுகளிலேயே கூந்தலுக்கு மை இட்டுக் கொள்வதால், சிகை அலங்கார நிலையங்களுக்கு கிராக்கி குறைந்துள்ளதாம். (ம-15)

## கண்டிப் பெரஹராவில் ஹிப்பிக்கள் தரிசனம்!

இம் முறை கண்டிப் பெரஹராவை முன்னிட்டு என்றுமில்லாத அளவுக்கு வெளிநாட்டுப் பிரயாணிகள் வந்துள்ளனர். அவர்களுள் அதிகமானவர் ஹிப்பீஸ்களாக காணப்படுகின்றனர்.

இந்த ஹிப்பிகள் கண்டிக்கு அண்மையில் இருக்கும் கிராமங்கள் தோறும் அதிகமாகத் திரிந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்களது நடத்தைகளைக் கிராம மக்கள் அதிகம் விரும்புவதாகத் தெரியவில்லை. சில வேளைகளில் இரவு நேரங்களில் தங்களுக்கு வசதியான கிராமப் பொது இடங்களில் ஆண்களும் பெண்களுமாகத் தங்குகின்றனர். பகல் வேளைகளில் ஊர் சுற்றித் திரிகின்றனர். (ம-312)

## பஸ்ஸிலிருந்து வீழ்ந்து காயம்

கண்டி பணிதெனியா இ. போ. ச. பஸ்ஸில் பிரயாணஞ் செய்த 14 வயதான மாணவன் ஒருவன் பணிதெனிச் சந்தியில் பஸ் திரும்புகையில் வெளியே குதித்ததன் காரணமாகப் பலத்த காயங்களுடன் பேராதனை மருத்துவ நிலையத்துக்கு அனுமதிக்கப்பட்டார். (ம-312)

## மரம் விழ்ந்ததால் படுகாயம்

பேராதனை கலஹாப் பாதைச் சந்தியில் பலா மரமொன்றை வெட்டிக் கொண்டிருக்கையில் பிரஸ்தாப மரம் திடீரென விழுந்துவிட்டதன் காரணமாக, அறுபது வயதான வயோதிபர் ஒருவர் விபத்துக்குள்ளாஞர். அந்த வயோதிபர் கடுமையான காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். (ம-312)

## பாரிஸில் மதியழகன் மது அருந்த வில்லையாம்!

சென்னை, ஆக. 12

தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் பாரிஸ் தமிழ் மாநாட்டுக்குச் சென்ற போது அங்கு மது அருந்தி முறைகேடாக நடந்து கொண்டார் என்று வெளியான பத்திரிகைச் செய்திகளுக்கு அவரே மறுப்பு அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

பிரஸ்தாப அறிக்கையில் திரு. மதியழகன் கூறியுள்ளதாவது:-

"பாரிஸ் மாநாட்டில் யுனெஸ்கோ மன்றத்தில், ஆதிசேஷையா அளித்த வரவேற்பு விருந்திலும், மாநாட்டிலும் தரக்குறைவாகவும், தாறுமாறுகவும் நடந்து கொண்டதாகச் சில பத்திரிகைகள் வெளியிட்டுள்ள விஷமத்தனமான செய்தி என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

"இலங்கை ஏடு கூறுவதானலும் சரி, இங்குள்ள ஏடுகள் கூறுவதானலும் சரி, இச் செய்திகள் அனைத்தும் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை, வடிகட்டிய பொய். கட்டுக்கதை- இட்டுக் கட்டிய கற்பனை என அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறேன்."

என்று கூறியுள்ள திரு- மதியழகன் தமது கூற்றுக்கு தம் கோஷ்டியில் சென்ற சிலருடைய பெயர்களைச் சாட்சிக்குக் குறிப்பிட்டுள்ளார்.

"கழகத்தையும், கழகத் தலைவர்களையும், அமைச்சர்களையும் கழக அரசையும் பழி கூறுவதை- கேவலப்படுத்துவதை தொழிலாகக் கொண்ட இந்த ஏடுகளின் பொய்யையும் புனை சுருட்டையும், புரளிகளையும், அவதாறுகளையும் தமிழ் மக்கள் பொருட்படுத்துவது இல்லை- இவைகளை நான் கவனிப்பதும் இல்லை- கவலைப்படுவதும் இல்லை. நான் செய்ய வேண்டிய கடமைகளில்தான் என் கவலை."

இவ்வாறு தமது அறிக்கையை முடித்திருக்கிறுர் திரு. மதியழகன்.

## கோஷ்டிச் சண்டையில் ஒருவர் பலி; மூவர் காயம்

இரு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட பயங்கர மோதல் ஒரு வாலிபரின் உயிரைக் குடித்து, மூன்று வாலிபர்களின் உடலுக்கு பலத்த காயத்தையும் ஏற்படுத்தி விட்டது. புத்தளத்திலுள்ள கிறசன்ட் சினிமாவில் நடைபெற்ற இச்சம்பவம் புத்தளத்தையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டது.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:—

புத்தளம் சிமெந்து கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த மூன்று வாலிபர்கள் நன்றுகக் குடித்துவிட்டு இரண்டாம் காட்சி சினிமா பார்த்துக் கொண்டிருந்த போது அவர்களுக்கும் முன்வரிசையில் ஒரு இளம் வயது பெண்ணும் அமர்ந்துகொண்டிருந்தாளாம். இவர்களுக்கு குஷி பிறக்கவே அந்தப் பெண்ணை தொந்தரவு செய்ய ஆரம்பித்தார்களாம். இதனல் தொந்தரவு அடைந்த மற்றக் கோஷ்டியினர் இவர்களைத் தடுத்தும் அவர்கள் கேட்கவில்லையாம். இதனல் இரு கோஷ்டிகளுக்குமிடையே எழுந்த வாக்கு வாதம் பெரும் கைகலப்பாக மாறியது.

கடுமையான கலகத்தின் மத்தியிலே முகம்மது ஜுனைதீன் (25) என்னும் வாலிபர் கோரமாக கிறீஸ் கத்தியால் தாக்கப்படவே ஸ்தலத்திலேயே மரணமானுர். மற்றும் புஹாரி, றசீத், அசீஸ் ஆகிய மூவரும் கடுமையான காயங்களுடன் சிலாபம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். புஹாரி என்பவருக்கு நிலைமை மோசமாகவே நீர்கொழும்பு ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்டுள்ளார். கத்தியால் குத்தியதாக சொல்லப்படும் சிமெந்து கூட்டுத்தாபனத் தொழிலாளரை பொலீஸார் கைது செய்துள்ளனர். மேலும் இருவரை பொலீஸார் தேடுகின்றனர். மரணமடைந்த ஜுனைதினுக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். (ம-46)

## உடலமைப்புப் பிரச்சினை

இரவோடு இரவாக அரசியற் சட்ட அமைப்பு ஒரு பெரும் பொழுது போக்காகி விட்டது- பஸ் ஸ்டாண்டிலோ, ஹோட்டலிலோ, கோவிலிலோ நாலு படித்தவர்கள் கூடிவிட்டால் அப்பப்பா கேட்க முடியாது வாதப் பிரதிவாதங்களை- ஆனல் இத்துணைக்கும் ஸ்ரீமான் பொதுஜனமோ, இதில் மிகவும் கவலையின்றி ஆறுதலாக இருக்கின்றுர்- இதன் மர்மம் என்னே? அவருடைய முழுக் கவனமும் உடலியற் சட்ட அமைப்பிலேயே சென்றுள்ளது- அதாவது அவருடைய பிரச்சினையெல்லாம் வயிற்றுப் பாட்டுப் பிரச்சினையேயாகும்- அதாவது எப்போது உணவுப் பொருள்கள் விலை மலியும் என்பதேயாகும்- எனவேதான் அரசியற் சட்ட அமைப்பில் ஈடுபட்டுள்ள அமைச்சர்களும் பிரதிநிதிகளும் ஸ்ரீமான் பொதுஜனத்தின் முக்கியமான உடலமைப்புப் பிரச்சினையை மறந்துவிடக் கூடாது என்று சொல்லி வைக்க விரும்புகிறேம்- அதை மறப்பது கலியாண வீட்டுச் சந்தடியில் தாலி கட்ட மறந்த கதையாகும்-

தந்தி

## இரத்தினபுரி, மன்னர் தேர்தல் வழக்குகள்

இரத்தினபுரி தேர்தல் ஆட்சேப வழக்கு விசாரணை இன்று காலை 11 மணிக்கு கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு- ஓ- எல்- டி- கிரெட்ஸர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இரத்தினபுரி முன்னுள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு- பி- பி- விஜயசுந்தரா இவ் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

அவர் தனது மனுவில் இரத்தினபுரி, இன்னர் சேர்கியுலர்வீதியில் வசிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரான திரு. நந்தா சிட்னி எல்லாவெல இரத்தினபுரி நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டது தேர்தல் சட்ட விதிகளுக்கு முரணனதெனவும், ஆகவே அவரது தெரிவை ரத்துச் செய்யும்படியும் கேட்டுள்ளார்.

### மன்னர்

மன்னர் தேர்தல் வழக்கு சம்பந்தமான ஆட்சேப மனு பற்றிய விசாரணை, நேற்றும் தொடர்ந்து நீதியரசர் திரு. வி- ரி- தாமோதரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கறிஞர்களின் சட்டப் பிரச்சினை சம்பந்தமான தொகுப்புரையின் பின், மேல் விசாரணை 14-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (ம)

## தலை மீது பழம் விழுந்து காயம்

பேராதனை யாளே தொடையைச் சேர்ந்த கிராமத்தில் பாதையில் நடந்து கொண்டிருந்த சேதுவா என்ற 45 வயதுடையவரின் தலையில் தூரியான் பழம் ஒன்று விழுந்ததனல் காயங்களுடன் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். தூரியான் பழத்தின் முள்ளுகள் தலையின் மண்டை ஓட்டைத் தாக்கியதனல் இரத்தக் காயங்கள் ஏற்பட்டு உள்ளன. (ம-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருவரிடம் ஜீவனாம்சம் கோரி நின்றாள்

# திருமண நாளை மறந்த நவீன நங்கை நல்லாள்

### கள்ளப் புருஷனுடன் கூடிய நாளை மட்டும் மறக்கவில்லை

"ஒரு பெண்ணுக்கு அவளது திருமண நாள் அவள் வாழ்விலே ஒரு திருநாள்- என்றுமே மறக்க முடியாத பொன்னான நாள்! இந்தப் பெண்ணோ ஒரு விசித்திரப் பேர்வழி. தனது சட்டபூர்வமான கணவனைத் திருமணம் செய்த நாள் இவருக்கு நினைவில்லை- ஆனால் கள்ளப் புருஷனுடன் உடலுறவு கொண்ட முதலிரவு நல்ல ஞாபகத்தில் இருக் கிறது-"

மத்துகொட சேர்க்கியூட் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. எஸ். டி. ஜயசுந்தர முன்னிலையில் நடைபெற்ற ஜீவனாம்ச வழக்கு ஒன்றில் எதிர் மனுதாரின் வழக்கறிஞர் மேற்கண்டவாறு கூறினார்.

கிரிபண்டா என்பவரிடமிருந்து தனது இரு குழந்தைகளுக்கு ஜீவனாம்சம் கோரி லொக்கு மெனிக்கா என்னும் பெண்மணி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

தனது முதல் கணவர் டிக்கிரி பண்டா என்பவர் என்று தெரிவித்த லொக்கு மெனிக்கா அவர் மூலம் தனக்கு நான்கு குழந்தைகள் உள்ளன என்று கூறினார். ஆனால் அவரைத் திருமணம் செய்த நாள் தனக்கு ஞாபகம் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

எதிர் மனுதாரின் வழக்கறிஞர்: "உமது முதல் குழந்தைக்கு வயது என்ன?"

மனுதார்: "அபெயரத்ன எனது முதல் குழந்தை. அவனுக்கு 13 வயது."

எதிர் மனுதாரின் வழக்கறிஞர்: "திருமண நாள் ஞாபகம் இல்லை. சரி, எந்த ஆண்டில் திருமணம் நடந்தது என்றாவது தெரியுமா?"

மனுதார்: "ஆம். 1951-ம் ஆண்டு திருமணம் நடந்தது. முதல் குழந்தைக்கு மூன்று வயதான போது என் சட்டபூர்வ கணவர் என்னைக் கைவிட்டுச் சென்றார்- அவரிடம் ஜீவனாம்சம் கோரி வழக்குத் தொடர்ந்தேன். ஆனால் இன்று வரை அவரிடம் இருந்து பணம் கிடைக்கவில்லை. காரணம் அவர் எங்கே இருக்கிறார் என்று கண்டு பிடிக்க முடியவில்லை."

எதிர் மனுதாரின் வழக்கறிஞர்: "சரி, இப்போது உமது கள்ளப் புருஷனிடமிருந்து ஜீவனாம்சம் கோருகிறீர். ஆகையால் அவருடன் முதன் முதல் எப்போது கூடினீர் என்று தெரிவிக்க வேண்டியவராக இருக்கிறீர்."

மனுதார்: "அது 1964-ம் ஆண்டு நவம்பரில் நடந்தது."

எதிர் மனுதாரின் வழக்கறிஞர்: "சட்டபூர்வமான கணவனைத் திருமணம் செய்த நாள் உமக்கு ஞாபகம் இல்லை. கள்ளப் புருஷனுடன் கூடிய நாள் நன்கு நினைவில் இருக்கிறது. நல்ல வேடிக்கைதான்!"

மேல் விசாரணை ஆகஸ்ட் 25-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம)

### எண்ணெய் கிடைக்கும்

இலங்கைத் தேயிலைக்குப் பதில் சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்குத் தேவையான சுத்திகரிக்கப்படாத எண்ணெய் கிடைக்கும்.

ஐக்கிய அரபுக் குடியரசுடனும் ஈராக்குடனும் இலங்கை பெற்

இந்த பண்டமாற்று ஒப்பந்தம் பற்றிய பேச்சு வார்த்தைகள் ஏற்கனவே முடிந்துள்ளன. இலங்கையின் மலைநாடுகள் தவிர்ந்த மற்றைய இடங்களில் வளரும் தேயிலைக்குப் பதிலாகவே இவ்வாறு எண்ணெய் பெறப்படும். (ம)

விரைவில் ஏற்படுத்திக் கொள்ள இருக்கும் ஒப்பந்தம் ஒன்றின்படி இது சாத்தியமாகும்.

ரோலியம் கூட்டுதாபனம் அதி

### மனைவியுடன் இளைஞன் ஒருவனை கண்ட கணவர் செய்த, வேலை

திருக்கோயில், ஆக. 12

சொந்த மனைவி கள்ளக் காதலனுடன் படுக்கை அறையிலே அரை நிர்வாணக் கோலத்தில் படுத்துறங்கியபோது கையும் மெய்யுமாக கணவன் கண்டு இந்த காட்சியை பகுதி கிராமசேவையாளரிடத்திலும், உறவினர்களிடத்திலும் காட்டிய சம்பவமொன்று திருக்கோயில் கிராமத்தில் நடைபெற்றது.

பதுளை பகுதியைச் சேர்ந்த பெண்ணை திருக்கோயில் பகுதியைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்து இன்பமாக வாழ்ந்துவந்தார்கள் என்றும், திருக்கோயில் கிராமத்தில் வாழ்க்கை நடத்திக் கொண்டு வரும்போது கணவரின் உறவினரான வாலிபன் ஒருவர் வந்து அவர்களுடன் நெருங்கிப் பழகிக் கொண்டு வந்தார் என்றும், இந்த பழக்கம்பற்றி ஊரார் பலமாதிரி சொல்லியதனால் அந்த வாலிபன் வீட்டுக்கு வருவதைக் குறைத்து விட்டான் என்றும், குறைப்பு பகிரங்கமாக இருந்தபோதிலும் இரகசியமான சந்திப்பும் தொடர்பும் இருந்துகொண்டே வந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இதுபற்றி கணவனுக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் நிமித்தமாக கணவன் வீட்டுக்கு சமீபத்தில் உள்ள தனது நெற்குத்தும் ஆலையில் காவலுக்கு தங்குவதாக சொல்லிக் கொண்டு பலநாள் தங்கி வந்தாராம். சம்பவம் நடந்த நள்ளிரவு திடீரென வீட்டுக்குச் சென்று ஜன்னல் வழியாக பார்த்தாராம். பார்த்த காட்சியை அவரால் மறக்க முடியாது. உடனே பகுதி கிராம சேவையாளரிடம் சென்று அவரையும் அழைத்துக் கொண்டு உறவினர் சகிதம் வீட்டுக்குவந்து ஜன்னல் வழியாக காட்சியை முதலில் காட்டிவிட்டு மீண்டும் கதவை திறக்குமாறு சொல்லி கையும் மெய்யுமாக காதலனிடத்தில் மனைவியை தாரைவார்த்துக் கொடுத்தார், கணவன்.

இவர்களுக்கு ஒரு சிறு குழந்தை உண்டு, அந்த குழந்தையை கணவனிடம் கொடுக்க மறுத்துவிட்டார். சம்பவம் பூராவும் கிராம சேவையாளர் தினப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு மனைவியையும், புதிய காதலனையும் கணவன் வீட்டில் இருந்து அப்புறப்படுத்தியுள்ளார். இப்போது இந்த புதுத் தம்பதிகள் தங்களின் தேன் நிலவைக் கழிப்பதற்கு எங்கே செல்வது என்று யோசித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

புதிய காதலன் என்று சொல்லப்படும் வாலிபன் தனது பெற்றோரினால் விரட்டப்பட்டு உறவினர் என்ற முறையில் காதலியின் கணவன் சேர்த்துவைத்து சோறு போட்டு பரீட்சை எழுத பணமும் கொடுத்து வைத்திருந்தாரென்றும் அதற்கு கைமாறுகவே மனைவியை காதலியாக்கிக் கொண்டான் என்றும் நடைபெற்ற விசாரணையின் போது தெரியவந்தது. காதலியைவிட காதலன் மிகவும் வயதில் குறைந்தவன். காதலுக்கு கண்ணில்லை என்று சும்மாவா சொல்லிவைத்தார்கள். (ம-23)

### நிர்வாண கோலம் அவர்களுக்கு மோகம்

லண்டன், ஆக. 12

"உலக இயற்கைவாதிகள் காங்கிரஸின்" 12-வது மகாநாடு வடக்கு கென்ட் மாநிலத்தில் நடைபெற்றபோது 3,000 பேர் கலந்து கொண்டனர்.

இந்த மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் நிர்வாணமாகவே காட்சி அளித்தனர்.

மின்சாரம் பாய்ச்சப்பட்ட கம்பி வேலிகளுக்குள் பலத்த காவல்களின் மத்தியில் நடைபெற்ற இந்த நிர்வாண மகாநாட்டை ஒளித்து நின்று களவாகப் பார்க்க பலர் கூடினர்.

எங்கு பார்த்தாலும் நிர்வாண உடல்கள். ஆண்களும் பெண்களும் தங்கள் உடலைத் திறந்து காட்டியபடியே அங்கும் இங்கும் உலாவினர்.

நிர்வாணமாக ஆடினர், நிர்வாணமாகப் பாடினர், நிர்வாணமாக நீந்தி விளையாடினர்.

வயதானவர்கள் திறந்த மேனியுடன் பார்த்திருக்க குழந்தைகளின் விநோத உடைப் போட்டி ஒன்று நடைபெற்றது. (ம)

### பீடிபற்ற நெருப்பு கேட்ட இளைஞனின் கைச்சேட்டை

மாவனல்லை, ஆக. 12

ஆற்றுக்கு குளிக்கச் சென்ற வாலிபன் ஒருவன் இடை வழியில் மழை பிடிக்கவே பக்கத்திலிருந்த ஒரு வீட்டுத் திண்ணையில் மழைக்காக ஒதுங்கினானாம்.

சிறிது நேரத்தில் பீடி ஒன்றை எடுத்து வாயில் வைத்தவாறு அந்த வீட்டில் தனியாக இருந்த பெண்ணிடம் நெருப்பு கேட்டானாம் அந்த வாலிபன். மங்கை தீப் பெட்டியை கொண்டு வந்து வாலிபனிடம் கொடுக்கவே வாலிபன் தனது கையை அந்த மங்கையின் கையில் உராயும் வண்ணம் தீப்பெட்டியை பிடுங்கி எடுத்தானாம்.

அந்த மங்கையும் வாலிபனின் கரம் தவறுதலாக தனது கையுடன் உராய்ந்து இருக்கும் என எண்ணிக் கொண்டு சும்மா இருந்து விட்டாளாம்.

பிறகு வாலிபன் பீடியை பற்ற வைத்துக் கொண்டு தீப் பெட்டியை அந்த மங்கையின் கையில் கொடுத்தபோது அவளது கையை தனது கையால் ஏதோ செய்து பிசுக்கினானாம்.

கண்ணகி பரம்பரையில் பிறந்த அந்த மங்கை கோபாவேசத்துடன் வாலிபன் மீது எரிந்து விழுந்து வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டத் தொடங்கவே அச்சம் கொண்ட வாலிபன் மிச்சம் இருக்க விரும்பாமல் மழை என்றும் பாராது ஓட்டம் பிடித்தானாம். (ம-203)

### நுவரெலியாவில் பொது வரவேற்பு

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் நுவரெலியா மாவட்டக்கிளை 16-8-70 அன்று ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது.

இப்பொதுக் கூட்டத்தில் கௌரவ அமைச்சர்கள்: பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா. செ. குமாரசூரியர், மைக்கல் சிறிவர்த்தன ஆகியோர் கலந்து கொள்வர். ஜனாப் ஏ. அஸீஸ் எம். பி., திரு. டி. பி. எம். ஹேரத் (வலப்பனை எம். பி.), ஜே. டி. வீரசேகர (கொத்மலை எம். பி.), பீ. பி. உனந்தென்னை (அங்குராங்கெட்ட எம். பி.), திரு. பி. காமினி ஆரியதிலகா (மஸ்கெலியா எம். பி.), திரு. கே. சிறில்பாபு (முன்னாள் மேயர் நுவரெலியா). ஜனாப் பா ஆ க் ஸாஹிர், திரு. வி. பி. கணேசன் (பொதுச் செயலாளர், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்), திரு. வி. பி. சதாசிவம் (தர்மகர்த்தா ஜ. தொ. கா.) ஆகியோர் கலந்து கொள்வர்.

ஜ. தொ. கா. நுவரெலியா மாவட்டத் தலைவர் திரு. ஐ. ஜோசப் கூட்டத்துக்கு தலைமை வகிப்பார். (ம)

### தொழிற் கமிட்டியின் முன் அஸீஸ் தெரிவித்த சிபார்சு

தொழிற் சட்டங்களைத் திருத்துவதற்காக தொழில் அமைச்சர் திரு. மைக்கல் சிறிவர்தன நியமித்துள்ள கமிட்டியில் அங்கம் வகிக்கும் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசின் தலைவரும் நியமன அங்கத்தவருமான ஜனாப் ஏ. அஸீஸ் தொழிற் கமிட்டியின் முன், அவர் பின்வருவனவற்றைத் தொழிலாளர் நலன் கருதி சட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

தொழிலாளர்களுக்கு நியாயமான அளவு மட்டுமே வேலை நேரமாயிருத்தல். வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கவும், வாழ்க்கையை நல்ல முறையில் நடத்துவதற்குமாக போதிய அளவு சம்பளம் வழங்குதல், ஆண் தொழிலாளர்களுக்கும் பெண் தொழிலாளர்களுக்கும் இடையிலான சம்பள வித்தியாசத்தை ஒழித்து. சம வேலைக்கு சம சம்பளம் வழங்குதல். தொழில் செய்யும் பெண்களுக்கு விசேட பாதுகாப்பு, பிரசவகால லீவு நாட்கள், ஓய்வுகால நாட்கள் ஆகியனவற்றை அதிகரித்தல், ஓய்வுகாலப் பணத்தை உயர்த்துதல். வேலையற்றிருக்கும் தொழிலாளருக்கு நிரந்தரமான உதவியளிக்கும் திட்டம். இன்னும் இவை போன்ற பல்வேறு அம்சங்களும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர் நீதிமன்றத்தின் உத்தரவுப்படி

# மாவை ஆலய வழக்கு விசாரணைகள் நிறுத்தம்

### மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் அறிவிப்பு

யாழ்ப்பாணம். ஆக. 12

மாவை ஆலய உற்சவ கால நிர்வாகி திரு. ஸி. சுந்தரலிங்கம் யாழ்ப்பாணம் பொலீஸ் சுப்பிரின்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் மீதும் மற்றும் 12 பொலீஸ் உத்தியோகஸ்தர்கள் மீதும் தொடர்ந்த வழக்கு சம்பந்தமான விசாரணைகள் நிறுத்தப்பட்டன.

உயர் நீதிமன்றத்திலிருந்து கிடைத்த உத்தரவைத் தொடர்ந்தே விசாரணைகள் நிறுத்தி வைக்கப்பட்டன.

இதற்கான உயர் நீதிமன்ற அறிவித்தலை மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ஆனந்த குமாரசுவாமி இன்று நீதிமன்றத்தில் வாசித்துக் காட்டினார்.

அடுத்த அறிவித்தல் அனுப்பப்பட்ட பின்னரே வழக்காளி தரப்பினரும், எதிரி தரப்பினரும் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்க வேண்டும் என்றும் மாஜிஸ்திரேட் அறிவித்தார்.

பொலிஸ் சுப்ரீண்டடன்டும், மற்றும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளும் நீதிமன்றத்துக்கு வரவில்லை. பொலிஸ் சுப்ரீன்டன்ட் மீது "வாரண்ட்" பிறப்பிக்க வேண்டும் என்ற வழக்காளி தரப்புக் கோரிக்கையை மாஜிஸ்திரேட் நிராகரித்தார்.

இனிமேல் நீதிமன்றத்துக்கு வரும்பொழுது உத்தியோக உடையில் வரக்கூடாதென்றும் மாஜிஸ்திரேட் எதிரிகளுக்கு உத்தரவிட்டார். (ம)

### சார்ஜண்ட் கைதானர்

மன்னார், ஆக. 12

மன்னார் பொலீஸ் சார்ஜண்ட் ஒருவர் ரூபா 1,000 லஞ்சம் வாங்கும் போது லஞ்சக் கமிஷனர் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டாராம்.

ரூபா 8,000 பெறுமதியான காசோலை மோசடி வழக்கொன்று பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளாதிருப்பதற்காக குறிப்பிட்ட சார்ஜண்ட் ரூ. 1,000 லஞ்சமாகக் கேட்டிருந்தாராம்.

முருங்கனைச் சேர்ந்த ஒருவர் இதுபற்றி செய்த முறைப்பாட்டை அடுத்தே குறிப்பிட்ட சார்ஜண்டை லஞ்சக் கமிஷனர் திணைக்களம் கைதுசெய்து உள்ளது.

### ல. தோ. தொ. யூனியன் நலவழி காட்டுகிறது

கம்பளை, ஆக. 12

"தோட்டத் தொழிலாளர்களுக்குப் பாடுபடுகிறோம் என்று சொல்லிக்கொண்டு ஏராளமான தொழிற் சங்கங்கள் மலை நாட்டில் இயங்குகின்றன. ஆனால், எதிர்காலத்தில் தோட்டத்தொழிலாளர்களைச் சரியான பாதையில் வழிநடத்தி அவர்களை முன்னேறச் செய்யத்தக்க வல்லமை லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனுக்குத்தான் உண்டு."

இவ்வாறு, மேற்படி யூனியனின் வெஸ்ட் மோர்லான்ட் தோட்டத் தேர்தல் கூட்டத்தில் பேசிய "செங்கதிர்" மாத சஞ்சிகை ஆசிரியர் திரு. சு. பிரியசிவன் குறிப்பிட்டார். அக் கூட்டத்திற்கு ல. தோ. தொ. யூனியன் நாவலப்பிட்டி, கம்பளை, புசல்லாவ மாவட்ட பிரதிநிதி திரு. யூ. நவரட்ன தலைமை தாங்கினர்.

இலங்கைத் தொழிலாளர் சம்மேளனப் பிரதிநிதி திரு. தே. ஷெல்டன் டி சில்வா, பதுப்பொல கிராமச்சங்க அங்கத்தவர் திரு. தே. எம். ஆரியதாசா, திரு. எஸ். கிருஷ்ணன், திரு. எஸ். வேலுசாமி ஆகியோர் கூட்டத்தில் பேசினர்கள்.

திரு. சு. பிரியசிவன் தனது பேச்சில் மேலும் குறிப்பிட்டதாவது:

"கடந்த காலத்தில் பிற் போக்குத் தொழிற் சங்கவாதிகள் தோட்டத் தொழிலாளர்களை இந்தியர்கள் என்று இன ரீதியில் பிரித்து வைத்து சிங்கள மக்களோடு ஐக்கியமாக வாழ விடாமல் தடுத்து வந்தார்கள், ஆனால், அவர்களால் இனிமேலும் தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

"லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனைச் சேர்ந்த நாங்கள் தோட்டத் தொழிலாளர்களை இந்தியர்கள் என்று கருதுவதில்லை. அவர்களை இலங்கைத் தொழிலாள வர்க்கத்தினரில் ஒரு பகுதியினராகவே கருதுகின்றோம். மேலும் ஏனைய தொழிற் சங்கங்களைப் போல, தொழிலாளர்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தொழில் நீதிமன்ற, பேச்சு வார்த்தை நடவடிக்கைகள் மூலம் தீர்த்து வைப்பது மட்டும் நமது லெட்சியம் அல்ல.

"ஒரு தொழிலாளர் அரசாங்கத்தினைப் பூரணமாக அமைப்பதே குறிக்கோளாகும். அதற்குத் தொழிலாளர்கள் ஒன்றுபட வேண்டும். எனவேதான் தோட்டத் தொழிலாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன், இலங்கை தொழிலாளர் சம்மேளனத்தில் இணைந்துள்ளது" என்றார். (ம)

### நாடாளுமன்ற புதிய கட்டம்

இலங்கையின் கலாசாரத்துக்கு அமைய புதியதொரு நாடாளுமன்றக் கட்டிடம் நிறுவப்படலாம் எனத் தெரிகிறது. சபாநாயகர் திரு. ஸ்டான்லி திலகரத்தின தலைமையிலான கமிட்டி ஒன்று இதுபற்றி ஆராய்ந்து வருகிறது. (ம)

### ஓரிஜினல் சிங்கக் கொடி

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 20 தொகுதிகளைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் எம். பிக்கள் அரசாங்கத்துக்கு விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் பிரிட்டிஷார் 1815-ம் ஆண்டு இறக்கிய "ஓரிஜினல்" சிங்கக் கொடியை புதிய அரசமைப்பின் போது மீண்டும் பறக்க விடும்படி கேட்டுள்ளனர். (ம)

## அரசமைப்பு நிர்ணயசபை வழி முறைக் குழு நியமனம்

அரசமைப்பு நிர்ணய சபையின் வழிமுறைக் குழுவுக்கு 15 பேர் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர். இவர்களில் தமிழர் இருவர். முஸ்லிம் ஒருவர்.

அரசியல் அமைப்பு நிர்ணய சபைக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் இரண்டு மணிக்கு தலைவர் திரு. ஸ்ரான்லி திலகரத்ன தலைமையில் நாடாளுமன்றத்தில் கூடியது.

வழிமுறைக் குழுவுக்கு நியமிக்கப்பட்டவர்களின் பெயர்களை தலைவர் திரு. ஸ்ரான்லி திலகரத்ன சபையில் அறிவித்தார். வழிமுறைக் குழுவுக்கு நியமிக்கப்பட்டோர் விபரம் வருமாறு:-

1. பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா. 2. அரசமைப்பு அலுவல்கள் அமைச்சர் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா. 3. மின்சக்தி பெருந்தெருக்கள் அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா 4. எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்தன 5. கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூது. 6. உள்ளூராட்சி உள்நாட்டு அரசாங்க சேவை நிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா 7. வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன 8. வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் 9. காணி விவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ 10. யாழ்ப்பாணம் எம். பி. திரு. சி. எக்ஸ். மார்ட்டின் 11. நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா 12. கடற்றொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் ராஜபக்ஸ 13. நல்லூர் பிரதிநிதி திரு. சி. அருளம்பலம் 15. கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா 15. சமூக சேவை அமைச்சர் திரு. ரி. பி. தென்னக்கோன்.

அரசியலமைப்பு சபை கூட்டம் மீண்டும் 19-ம் திகதி இரண்டு மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. (ம)

## நீதிமன்றத்தின் உத்தரவை அவர் அவமதித்தாரா?

நீதிமன்றத்தை அவமதித்ததற்காக ஏன் தண்டனை விதிக்கப்படக் கூடாது என்பதற்கு ஆதாரம் காட்ட போதிய அவகாசம் தருமாறு, அங்கொடையைச் சேர்ந்த திருமதி தே. டி. எம். என். சோமாவதி வனிகசூரியா, கேட்டார்.

உயர் நீதிமன்றத்தில், நீதியரசர்கள் ஏ. ஸி. அலஸ், ஜி. டி. சமரவிக்கிரம கியூ. ஸி., சி. ஜி. வீரமந்திரி ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டது.

காலஞ்சென்ற தனது கணவர் ஜேமஸ் பெரேரா வனிகசூரியாவின் சொத்துக்களை பராமரிப்பவராக திருமதி சோமாவதி வனிகசூரியா நியமிக்கப்பட்டிருந்தார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் 1967 ஆகஸ்ட் 17-ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சார்பாக ரூ. 93,000 கோர்ட்டில் கட்டும்படி கேட்கப்பட்டிருந்தார். 1968 மே மாதம் 22-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகினர். 1968 செப்டம்பர் 3-ந் திகதிக்கு முன் ரூ 74,320.45ஐ கோர்ட்டில் கட்டும்படி உத்தர விடப்பட்டார். ஆனல் பணத்தைக் கட்ட போதிய அவகாசம் கேட்ட சோமாவதி, குறித்த தவணையில் பணத்தைக் கட்டவில்லை.

எனவே, கோர்ட்டை அவமதித்ததற்காக ஏன் அவரை தண்டிக்கக் கூடாது என்று உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

தவிர்க்க முடியாத காரணங்களாலேயே திருமதி சோமாவதி வனிகசூரியா தமது உறுதி மொழியைக் காப்பாற்ற முடியவில்லை என்றும், எனவே போதிய அவகாசம் வேண்டுமென்றும் வழக்கறிஞர் திரு. மார்க் பெர்ணண்டோ விண்ணப்பம் செய்தார்.

திருமதி சோமாவதி வனிகசூரியாவுக்கு மேலும் இரண்டுமாத அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது: (ம-15)

## நிர்வாண சங்கீத நிகழ்ச்சி இறுதியில் கைவிடப்பட்டது

எடின்பேர்க், ஆக. 12

இவ்வருடம் எடின்பேர்க் நகரில் நடைபெறவிருக்கும் தேசிய விழாவில், இடம்பெறவிருந்த அமெரிக்க நிர்வாண சங்கீத நிகழ்ச்சி ஒன்று இறுதியில் கைவிடப்பட்டுள்ளது.

"இது அளவுக்கு மிஞ்சி விட்டது" என விழாத் தலைவர் குறிப்பிட்டார்.

இதற்குமுன் பெண்கள் மார்புகளைக் காட்டும் நிகழ்ச்சி முதலிய பல அரை நிர்வாணக் காட்சிகளும் இடம் பெற்றுள்ளன.

எதிர்ப்பைக் கிளப்பிய இந்த நிர்வாண நிகழ்ச்சி இரண்டு கிழமைகள் தொடர்ந்து நடைபெறவிருந்தன.

எடின்பேர்க் விழா முடிந்தவுடன் இந்தக் கோஷ்டியினர் லண்டனில் தமது நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடாத்துவர் (ம-15)

## சேமலாப நிதி பற்றி பிரதமர் அறிக்கை கோரல்

நாடு திரும்பவுள்ள இந்திய வம்சாவளியினரின் சேமலாப நிதியைத் திருப்பி அளிக்கும் நடவடிக்கைகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்று அறிக்கை சமர்ப்பிக்கும்படி பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்கா உத்தரவிட்டுள்ளார்.

ஊழியர் சேமலாப நிதி அதிகாரிகளுக்கு விடுத்துள்ள உத்தரவில் மேற்கண்ட விஷயம் பற்றி உடன் அறிக்கை தரும்படி பிரதமர் கோரியுள்ளார்.

இந்திய வம்சாவளியினர் நாடு திரும்புவதற்கு சேமலாப நிதி ஒரு தடையாக இருக்கிறது என்று கருதப்படுகிறது (ம)

இப்பத்திரிகையை அச்சிட்டவர், சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு—12. (இலங்கை). வெளியிட்ட திகதி 13 ஆகஸ்ட் 1970.

Thanthi 5. Gunasena Mawatha, Colombo 12, (Ceylon).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org